Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 338

திங்கட்கிழமை 30 ஒக்ரோபர் 2023

– வள்ளுவர் ஆண்டு 2054



## 17 இலங்கையர்கள் காஸாவில் பரிதவிப்பு

டெல்அவிவ், ஒக். 30
இஸ்ரேல் - ஹமாஸ் மோதலுக்கு இடையே, 17 இலங்கையர்கள் காஸா பள்ளத்தாக்கில் சிக்குண்டுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

»11

## இலங்கைக் கடற்பரப்பில்
# ஆய்வுப் பணிகளை ஆரம்பிக்கிறது சீனா

**கொழும்பு, ஒக்ரோபர் 30**

**இலங்கைக்கு வருகைதந்துள்ள சீனக்கப்பல்,நாராவுடன்இணைந்து இன்றையதினம் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.**

»11

## முதியவர் ஒருவர் அடித்துக்கொலை

### தமிழ்ச் சிப்பாய் வெறிச்செயல்

முல்லைத்தீவு, ஒக். 30
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தமிழ்ச் சிப்பாய் ஒருவரால், வயோதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

»11

## அரிசியின் விலை அதிகரிப்பு; கண்காணிக்க சுற்றிவளைப்பு

கொழும்பு, ஒக். 30
நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட, அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுகிறது. எதிர்காலத்தில் விலையை கட்டுப்படுத்த முடியாதுபோனால் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள

»11

## பட்ஜெட்டை குழப்பினால் நாடாளுமன்றம் கலைப்பு

அரசு அவதானம்

விரிவு பக். - 05

கொழும்பில் முகாமிட்ட சீனக்கப்பல்

## 64 தமிழக மீனவர்கள் 10 படகுகளுடன் கைது!!

விரிவு பக். - 03

## மயங்கி வீழ்ந்த மாணவி இறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30
தலைவிறைப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்த நிலையில், சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட மாணவி சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். குருநகரைச்சேர்ந்த ஜேசுதாஸ்

»11

## பேராசிரியராக பதவி உயர்வு



யாழ்., ஒக். 30
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர்.விஜயகுமாரன் பேராசிரி

»11



## பண்ணைக் கடலில் பாய்ந்தது ஓட்டோ!

### குழந்தை உட்பட ஐவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வேகமாக பயணித்த ஓட்டோவொன்று வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஐந்து பேர் காயமடைந்தனர்.

»11

## வயிற்றுவலி: யுவதி பலி!

யாழ்ப்பாணம், ஒக். 30
வயிற்றுவலி காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட யுவதி ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

»11



## துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள்!

யாழ்ப்பாணம், ஒக். 30
தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
துப்புரவுப் பணிகளைத் தொடர்ந்து, இனத்தின் விடுதலைக்காக மூன்று பிள்ளைகளை வித்தாக்கிய சண்முகலிங்கம் பொதுச்சுடரேற்றிவைக்க, மாவீரர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
வழமைபோல் இவ்வருடமும் மாவீரர் தின நிகழ்வுகள் தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவால் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், இந்தத் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)



## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 30
மின்குமிழைப் பொருத்தும்போது மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த உ.உசாந்தன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் பயணத்துக்கு எதிர்ப்பு: போராடியவர்களுக்கு வழக்கு

மட்டக்களப்பு, ஒக். 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்றிருந்தபோது மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை விவகாரத்தில் நீதிகோரி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு எதிராக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் மட்டக்களப்பு பயணத்தின்போது மட்டக்களப்பு- செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கடந்த 8 ஆம் திகதி காலை கலந்துகொள்ளச் சென்றபோது கொம்மாந்தறைப் பகுதியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஜனாதிபதி வருகையின்போது, கொம்மாந்தறைப் பகுதியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டிய பொலிஸார், ஏறாவூர் நீதிமன்றில் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ஓ-100)

# இ.போ.ச., தனியார் தூரசேவைக்கு நேரசூசி விரைவில் நடைமுறை!

## யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஒக். 30**

**இ.போ.ச. பேருந்து சேவைக்கும் தனியார் பேருந்து சேவைக்கும் இடையிலான இணைந்த நேரஅட்டவணை முறைமையை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேணாமையால் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று யாழ். தூரசேவைகள் தனியார் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோதே இந்தவிடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது அந்தச் சங்கத்தின் தலைவர் தெரிவிக்கையில்;

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் தனியார் போக்குவரத்துக்கும் இடையில் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்படவில்லை. குறிப்பாக பிற மாகாணங்கள் உட்பட யாழ்.மாவட்டத்துக்கு வருகைதரும் பேருந்துகள் எவையும் முறையாக இணைந்த நேர அட்டவணைக்கு உட்படவில்லை. இதனால் வீதி விபத்துகள், போட்டி நிலைமைகள் உருவாகின்றன.

அத்துடன் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினர், வேலை நாள்களைத் தவிர சனி, ஞாயிறு தினங்களில் எமக்கான சிட்டை விநியோகத்தில் ஈடுபடுவதில்லை. வேலைநாள்களில் மாத்திரமே தம்மால் கடமையாற்ற முடியும் என்று தெரிவிக்கின்றனர்- என்றார்.

இதன்போது யாழ். மாவட்டச் செயலர் கருத்து தெரிவிக்கையில்;

அதிகாரசபைக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். இணைந்த நேர அட்டவணை விரைவில் நடைமுறைக்குவரும். சனி மற்றும் ஞாயிறு தோறும் சிட்டை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

அதேவேளை 3 மாத காலத்தினுள் தூரசேவைகளை மேற்கொள்ளும் இ.போ.ச. பேருந்துகளையும் நீண்டதூரப் பேருந்து நிலையத்தில் தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-125)

# 104 கிலோ கஞ்சா மீட்பு; சந்தேகத்தில் இருவர் கைது

வட்டுக்கோட்டை, ஒக். 30



வட்டுக்கோட்டையில் 104 கிலோ எடையுடைய கேரளாக் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று அதிகாலை கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை வீதியூடாக வாகனத்தில் கஞ்சாவை எடுத்துச் செல்லும்போது கடற்படையின் புலனாய்வுப் பிரிவு மற்றும் மோட்டார் சைக்கிள் சுற்றுக்காவல் பிரிவு என்பன இணைந்து இவர்களைக் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் மாதகலையும், மற்றையவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என அறியமுடிகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-26,27)

# செய்கையாளரை ஊக்குவிக்க 3 இலட்சம் தென்னங்கன்றுகள்!

## தென்னை அபிவிருத்திச் சபையால் வடக்கில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு மாதகாலப்பகுதியில் மட்டும் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வரையான தென்னங்கன்றுகள் செய்கையாளர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன என்று தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

வடக்கில் தென்னைச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 48 ஆயிரம் தென்னங்கன்றுகளும் கிளிநொச்சியில் 32 ஆயிரம் தென்னங்கன்றுகளும் முல்லைத்தீவில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் தென்னங்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

கால் ஏக்கர் மற்றும் ஒரு ஏக்கருக்கும் உட்பட்ட செய்கையாளர்களுக்கே இவ்வாறு தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்குள் மூன்று இலட்சம் வரையான தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படும்.

அதேவேளை ஒரு ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் தென்னைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு 95 வீத மானிய விலையில் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் தென்னை அபிவிருத்திச் சபை குறிப்பிட்டது. (ச-17)

# பொன்சேகாவின் பதவிக்கு ஆப்பு!

கொழும்பு, ஒக்.30

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை அந்தக் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரத் பொன்சேகாவை நீக்கிவிட்டு அந்தப் பதவிக்கு கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆலோசனை நடத்தியுள்ளார்.

சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படுவதால் அவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, கட்சியின் பெரும்பான்மையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் மொரு சிரேஷ்ட உறுப்பினர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் என்று அந்தக் கட்சியின் உள்ளக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாள்களாக ஐக்கிய மக்கள் சக்திக்குள் பொன்சேகாவுக்கு எதிரான கருத்துகள் வலுப்பெற்று வருகின்றன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து பல்வேறு இரகசிய நகர்வுகளில் சரத் பொன்சேகா ஈடுபட்டுள்ளதாலேயே கட்சிக்குள் பொன்சேகாவின் பதவியைப் பறிக்க வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றுள்ளது.

முன்னிலை சோஷலிஸக் கட்சியுடன் பொன்சேகா நெருங்கிய தொடர்பைப் பேணிவருகின்றார் எனவும் பொன்சேகாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. (எ-இ)

# 'பிஜபி' இணைத்தலைவர் சீலனுக்கு பொலிஸார் எனக்கூறி அச்சுறுத்தல்

மட்டக்களப்பு, ஒக். 30

நான் வீட்டில் இல்லாத நிலையில் பொலிஸார் எனக் கூறிய இருவர் வீட்டுக்கு வந்து விசாரித்துச் சென்றுள்ளமை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடு எனப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத் தலைவர் சீலன் சிவயோகநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற இருவர் தம்மை பொலிஸார் எனக் கூறி அவரது மனைவியிடம் விசாரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து வருவதாகக் கூறிய இருவர் நான் வீட்டில் இல்லாதபோது என்னைச் சந்திக்கவேண்டும் என எனது மனைவியிடம் கூறியுள்ளனர். இவ்வாறு வந்தவர்களில் ஒருவர் பொலிஸாருக்குரிய சீருடை அணிந்திருந்தார். மற்றையவர் சாதாரண உடையில் பொலிஸ் எனப் பொறிக்கப்பட்டுள்ள தலைக்கவசம் அணிந்திருந்தார்.

இதுபோன்று முன்னரும் பல தடவைகள் நான் வீட்டில் இல்லாதபோது மேற்படி பொலிஸ் நிலையத்தின் பெயரைச் சொல்லி வந்து செல்வது வழமையான ஒரு விடயமாகக் காணப்படுகிறது. இவ்வாறான செயற்பாடானது எனது குடும்பத்தாருக்கு மனதளவில் மிகவும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அச்சுறுத்தும் விதமான செயற்பாடாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்தார். (ஓ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் முகாமிட்ட சீனக்கப்பல்

# 64 தமிழக மீனவர்கள் 10 படகுகளுடன் கைது!!

யாழ்ப்பாணம், ஒக். 30

**சார்ச்சைக்குரிய சீன உளவுக்கப்பல் இலங்கை கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள நிலையில் கடந்த இரு வாரங்களில் மட்டும் 10 விசைப்படகுகளுடன் 64 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இலங்கை கடற்பரப்பில் சீன உளவுக்கப்பல் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதையடுத்து கடந்த சில தினங்களாக இலங்கைக் கடற்படையினர் இலங்கையின் கடல் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது, எல்லைதாண்டி மீன்பிடித்ததாக தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூன்று படகுகளுடன் அதிலிருந்த 23 மீனவர்களையும் கைதுசெய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

அதேபோன்று நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 2 படகுகளுடன் அதிலிருந்து 14 மீனவர்களையும் இலங்கை கடற்படை கைது செய்த நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் மட்டும் வடக்கு கடற்பரப்பில் வைத்து 37 தமிழக மீனவர்கள் 5 விசைப் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை -கடந்த 14ஆம் திகதி மன்னார் மற்றும் நெடுந்தீவு கடற்பரப்புகளில் வைத்து 27 மீனவர்கள் ஐந்து படகுகளுடன் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதியில் இருந்து நேற்று முன்தினம் வரையான இரு வார காலத்தில் இலங்கை கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்தைச் சேர்ந்த 10 விசைப்படகுகளும் அதிலிருந்த 64 மீனவர்களும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-26,100)

# மருந்துக் கொள்வனவு நிலுவையை செலுத்தி முடிக்க நடவடிக்கை!

சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 30

மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் பல்வேறு விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான நிதியை விடுவிப்பதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தொழிற்றுறை மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

மருந்துகளுக்கான கட்டணம் செலுத்தல் தொடர்பில் சுகாதார மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலின் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நான் போன்றவர்கள் பங்கேற்றிருந்தோம். அதில் விசேட அமைச்சரவை அனுமதியின்கீழ் ஒதுக்குவதற்கு தேசிய வரவு-செலவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்க வேண்டும் என்று வரவு- செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் நிலுவையில் உள்ள கட்டணங்களைச் செலுத்துதல் போன்ற அத்தியாவசிய சுகாதார செலவுகளுக்கு எந்தவித தாமதமும் நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், போலி அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி மருந்துகளை இறக்குமதி செய்வதை தடுப்பதற்கும் விசேட நடவடிக்கைகளை சுங்க திணைக்களத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்படவுள்ளது. வெகுவிரைவில் மருந்து தட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற்றும் தரம் குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதை தடுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டு நிறைவுக்கு கொண்டு வரப்படும் - என்றார். (எ-இ)

## கூட்டணி அமைக்க டலஸ் தரப்பு ஆயத்தம்

கொழும்பு, ஒக். 30

எதிர்வரும் தேர்தலில் அரசியல் கூட்டமைப்பை உருவாக்கி போட்டியிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் களமிறங்கியுள்ளது.

இதற்கென சுதந்திர மக்கள் சபையின் பல உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுடன் தனித்தனியாக அரசியல் கூட்டணி குறித்து கலந்துரையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தலை இலக்குவைத்தே ஆரம்பகட்ட நடவடிக்கையாக இந்தக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகிறது. (ச-இ)

## கசிப்புடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 30

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய சங்கானைப் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 20 வயதுடையவர் என்றும், சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## புதினம் தெரியுமோ?

"என்ர புருசனும் வேலைக்குப் போறார்" எண்ட கணக்கில, யாழ்ப்பாணத்தாரும் தங்களுக்கொரு சர்வதேச விமான நிலையம் இருக்கெண்டு பீத்திக்கொண்டு திரியிறம். ஆனால், உண்மையில அந்தச் சர்வதேச விமான நிலையத்தைவிடவும், யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்ட் வலுதிறம். அந்தளவுக்கு பலாலி எயார்போட்டால போய் வாறவை நொந்து நூடில்ஸாகினமாம்.

ஏதோ வேண்டாப் பிள்ளையைப் பெத்து காண்டாமிருகம் எண்டு பேர் வைச்ச மாதிரித்தான், பலாலி எயார்போர்ட்டையும் "இன்ரர் நஷனல் எயார்போர்ட்" எண்டு இலங்கை அரசாங்கம் மாத்தினது. யானைக்காட்டுக்குள்ள, நெல்லுமூடை அடுக்கிறதுக்கும், பறவையள் கூடு கட்டுறதுக்கும் மத்தளவில சுத்திவர ஏஸிபோட்டு, கோடிக்கணக்கான காசை சிலவழிச்சு எயார்போர்ட் கட்டத் தெரிஞ்ச அரசாங்கத்துக்கு, இஞ்ச பலாலியில மட்டும் சனங்கள் போய் வாறதுக்கு காசை சிலவழிக்க ஏனோ மனம் வரேலை. அப்பிடி இருந்தும் இந்தியன் அரசாங்கம் தாங்கள் பலாலி எயார்போர்ட்டை பெரிசாக்கி, வடிவாக் கட்டித்தாறம் எண்டு சொல்லியும், அதுக்கும் எங்கட அரசாங்கம் முழுமனதோட வழிவிடுகிறதில்லை. அதாலதான் இப்பிடி தார் றோட்டில ஒரு தகரக் கொட்டிலைப் போட்டிட்டு அதைப்போய் "இன்ரர் நஷனல் எயார்போர்ட்" எண்டு ஊரெல்லாம் படம் காட்ட வேண்டிய நிலைமை.

இப்ப மழைகாலம் தொடங்கிட்டு. பயணம் போறவையை வழியனுப்ப போறவையும், பிளைட்டில வாறவையை கூட்டிக்கொண்டு வரப் போறவையும் உந்த மழைக்குள்ள ஒதுங்கி நிக்கக்கூட ஒழுங்கான ஒரு கட்டடமில்லையாம். மழைக்க நனைஞ்சபடிதான் வெளியில நிக்கோணும். அதைவிட வாசலில் இருந்து உள்ளுக்க போற இடம் மட்டும் ஒரேசேறும், சகதியும், வெள்ளமும். அதுக்குள்ளதான் வாகனங்கள் தவண்டடிச்சு போக வேண்டியிருக்கு. கொஞ்சம் ஒழுங்கான பாதையைப்போட்டு, ஆக்கள் வெளில நிக்கிறதுக்கு ஏத்தமாதிரிக் கட்டடங்களைக் கட்டாட்டி இதால திரும்பவும் பிளைட்டில போற எண்ணத்தைக் கனபேர் கைவிட்டிடுவினம். பலாலி எயார்போட்டுக்கு போறதைவிட தட்டி வான்ல போகலாம். இப்பிடி ஆத்துலைஞ்சு பலாலியால போய்வாறதைவிட, பேசாமல் கட்டுநாயக்கவுக்கே ரிக்கெற்றை போடலாம் எண்ட நிலைமைக்கு கனபேர் வந்திட்டினம். சிலவேளை அதைத்தான் அரசாங்கமும் எதிர்பாக்குதோ தெரியேலை. இப்பிடி எயார்போர்ட்டில ஒரு அபிவிருத்தியும் செய்யாமல் விட்டால், சனங்கள் வாறது குறையும். அப்பிடியே மெல்ல மெல்ல பிளைட்டுகளையும் கொம்பனியள் நிப்பாட்டிப் போடும். அதைவைச்சு எயார்போர்ட்டை இழுத்துமூடலாம் எண்டதுதான் அவையின்ர திட்டமோ தெரியேலை. இப்பிடி தன்ர நாட்டில உள்ள ஒரு எயார்போர்ட்டையே வளரவிடாமல் தறுக்கணிக்கவைக்கிறவை ஆட்சியில இருந்தால் எப்பிடி பொருளாதாரம் உருப்படும்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயனின் பரிசுக்குவியல்

ஆப்கானிஸ்தான் - இலங்கை அணிகளுக்கிடையிலான இன்றைய (30.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

தினம் ஒரு பரிசு 26

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.


# உலகக்கிண்ணத்தில் இங்கிலாந்து 'அவுட்'

**நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன், உலகக்கிண்ணத் தொடரில் கலந்துகொண்ட இங்கிலாந்து அணி, இந்திய அணிக்கு எதிரான நேற்றைய தோல்வியுடன் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது.**



அரையிறுதிக்கு இங்கிலாந்து தகுதிபெற வேண்டுமாயின், எஞ்சியுள்ள அத்தனை ஆட்டங்களிலும் வெற்றிபெறும் அதேவேளை அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் எஞ்சியுள்ள அத்தனை ஆட்டங்களிலும் தோல்வியடைய வேண்டும். அதிலும் அவுஸ்திரேலிய அணி தன் ரண்ரேட்டை இழக்க வேண்டும். போன்ற சாத்தியமற்ற சந்தர்ப்பங்களே எஞ்சியிருக்கின்றன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பம் படுமோசமாகவே அமைந்தது. கில் 9 ஓட்டங்களுடனும், கோலி ஓட்டமெதையும் பெறாமலும், ஸ்ரேயஸ் 4 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 40 ஓட்டங்களில் 3 விக்கெட்களை இழந்தது இந்தியா. ரோகித், ராகுல் இணைந்து அணியை கொஞ்சம் கொஞ்சமாக மீட்டெடுத்தனர். அணி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராகுல். அதன் பின்னர் வந்த சூரியக்குமார் யாதவ் அபாரமாக ஆடினார். மறுமுனையில் அரைச்சதம் கடந்திருந்த அணித்தலைவர் ரோகித் 87 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். சூரியக்குமார் 47 பந்துகளில் 49 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்க முடிவில் 9 விக்கெட்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

பந்துவீச்சில் வில்லி 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணியை பும்ரா. சமியின் வேகம் தாறுமாறாக ஆட்டிப்படைத்தது. ஆரம்ப வீரர்களான பேர்ஸ்ரவ் 14 ஓட்டங்களுடனும், மலன் 16 ஓட்டங்களுடனும், ரூட், ஸ்ரோக்ஸ் இருவரும் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். லிவிங்ஸ்டனைத் தவிர வேறு எவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. மத்திய வரிசையின் நம்பிக்கையாக இருந்த மொய்ன் அலி 15 ஓட்டங்களுடன் சமியால் போல்ட் செய்யப்பட்டார். முடிவில் 129 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இங்கிலாந்து. லிவிங்ஸ்டன் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சமி 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ம)

# இங்கிலாந்து அணி கீழ்நிலை அணியே

## சேவாக் விளாசல்



இங்கிலாந்து அணியினர் ஒருவித மெத்தனப்போக்கில் ஆடுகின்றனர். அவர்கள் எவ்வகையான ஆட்டத்தை விளையாடப்போகின்றோம் என்ற குறைந்தபட்சப் புரிதல் கூட இல்லாத அணியினர் இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் அதிரடி வீரர் சேவாக். அவர் மேலும் தெரிவித்த தாவது:

இங்கிலாந்தின் உலகக் கிண்ண அணி படுமோசமாக உள்ளது. 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை தங்கள் மண்ணில் வென்றதைத் தவிர அவர்கள் கடந்த 8 உலகக்கிண்ணத் தொடர்களில் ஒருமுறைதான் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர். நிலையான அணியாக இல்லாமல் அடிக்கடி அணியை மாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

வீரர்களை எடுப்பதும் பெஞ்சில் அமரவைப்பதுமாக இருக்கின்றனர். டெஸ்ட் போட்டிகளைப் போலவே ஒரு நாள் போட்டிகளிலும் நாம் தான் உற்சாகமான வீரர்கள். நாம்தான் உத்வேகத்துடன் ஆடுகிறோம் என்ற தவறான எண்ணத்தில் ஆடுகின்றனர். இத்தகைய எண்ணம்தான் அவர்களது சரிவுக்குக் காரணம்' - என்றார். (ம)


இன்றைய ஆட்டம்

ஆப்கானிஸ்தான் | இலங்கை

இடம் : புனே
நேரம்: பி.ப. 2.00

Sri Lanka Cricket


## தினம் ஒரு பரிசு நாள் 24 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| செ.பாலசந்திரன் | - சுழிபுரம் | வி.கபிஷானன் | - மருதனார்மடம் |
| தே.யசோதரன் | - உடையார்கட்டு | எஸ்.சந்திரசேகரம் | - திருநெல்வேலி |
| சி.குணசீலன் | - வட்டுக்கோட்டை | மோ.யோகசிறி | - மூளாய் |
| தி.நடராசா | - யாழ்ப்பாணம் | த.பாரதி | - கைவேலி |
| சு.அக்சயா | - தெல்லிப்பழை | சி.ராஜ்குமார் | - வெங்கலசெட்டிக்குளம் |
| ச.மதியுகன் | - மீசாலை | மா.ஆரதி | - நானாட்டான் |
| செ.செல்வராசா | - காரைநகர் | சி.பூர்ணிமா | - புதுமுறிப்பு |
| தி.பாணிதரன் | - கோப்பாய் | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்சியின் பாதை!

பௌத்தர்கள் வாழாத இடத்தில் எதற்காக விகாரை அமைக்கின்றீர்கள்? அதிலும் தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்து விகாரைகள் அமைக்கப்படுவதன் நோக்கம் என்ன? என்று தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியிடம் நேரில் வினவியுள்ளனர் சிங்கள சிவில் சமூகத்தினர். யாழ்ப்பாணத்தில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு மனோநிலையின் ஓர் அம்சமாகவும் சிங்கள – தமிழ் மக்களிடத்தில் மதத்தை மையப்படுத்திய மோதலொன்றுக்குத் தூபமிடும் பதற்ற முனையாகவும் தையிட்டி திஸ்ஸ விகாரை இருக்கையில், சிங்கள சமூகத்தினரே அதன் விகாராதிபதியை நேரில் சந்தித்து 'இந்த விகாரை தமக்கு அவசியமில்லை' என்ற தோரணையில் செயற்பட்டிருப்பது உண்மையில் வரவேற்கத்தக்கதுடன் பாராட்டப்படவேண்டிய விடயமாகவும் அமைந்துள்ளது.

30 ஆண்டுகால குருதிச் சகதியைச் சந்தித்த நாடான இலங்கை, அந்த நீண்ட போரிலிருந்து எவற்றையும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. 'சிங்கள – பௌத்த' அடக்குமுறையின் உச்சப் பிழிவு நிலையே ஆயுதப்போராட்டமொன்று ஏற்படக் காரணமானது. ஆனால், போர் மௌனித்த பின்னரும்கூட கடந்தகாலத் தவறுகளைச் சரிசெய்துகொண்டு நகரும் சாத்தியப்பாடுகள் இலங்கையின் நடத்தையில் தெரியவில்லை. முன்னர் இருந்த அதே ஆக்கிரமிப்பு மனோநிலைதான் இப்போதும் இருக்கின்றது – தொடருகின்றது. நாளுக்குநாள் அதன் குணம் கோரமாக மாறுகின்றதே அன்றி தணிந்ததாக இல்லை.

இனவாதத் தீயின் இந்த ஆக்கிரமிப்பு மனோநிலை மாற்றம்பெற்று இலங்கைத் தீவு சுபீட்சமானதொரு பாதையில் பயணிக்கத் தலைப்படவேண்டுமாயின், இனவாதத்துக்கு எதிரான குரல்கள் தமிழர்களிடமிருந்து மட்டுமல்லாமல் பெரும்பான்மையினமான சிங்களச் சகோதரர்களிடம் இருந்தும் வெளிப்படவேண்டும். இனவாதத்துக்கு எதிராகவும் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், இடதுசாரிக் கொள்கையுடைய சிங்களச் சகோதரர்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பே இலங்கைத் தீவு இனவாதத்திலிருந்து மீட்சியடைவதற்கு வழிசெய்யும்.

போர் முடிவுக்கு வந்து இற்றைக்கு பதின்நான்கு வருடங்கள் முழுமையாகக் கடந்துவிட்டபோதிலும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களோ – அல்லது தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களோ, சிங்கள இடதுசாரியினரை – சிவில் சமூகத்தினரை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. தமிழ்த் தேசியத்தின் ஆகப்பெரும் தோல்வியே இதுதான். தமிழர்களுக்காகவும் சிங்கள – பௌத்த ஆக்கிரமிப்பு மனோநிலைக்கு எதிராகவும் சிங்கள மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு திரள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மீட்சிக்கான வாய்ப்புகள் மிக அதிகம். உண்மையில், போரின் பின்னரான இந்த ஒன்றரைத் தசாப்தத்தில் ஒரு போராட்டக் களத்தை – ஆதரவுத் தளத்தை சிங்கள சிவில் சமூகத்தினரையும் இடதுசாரிகளையும் மையப்படுத்தி ஏற்படுத்தியிருக்கவேண்டும். அந்த அரசியலை நடைமுறைப்படுத்துவதில் – செயற்படுத்துவதில் தமிழர்களின் தலைவர்களாகத் தம்மைக்காட்டிக் கொள்ளும் அனைவரும் படுதோல்வியே அடைந்திருக்கின்றனர்.

தமிழர்களின் வேணவாக்களை அடைந்துகொள்வதற்கான மீட்சிப் பாதை எதுவென அடையாளம்கண்டு அந்தப் பாதையில் பயணப்படுவதே அரசியல் இராஜதந்திரத்துக்கும் அழகு.

நாளொரு நல்வார்த்தை

வெற்றியைச் சந்தித்தவன் இதயம் பூவைப் போல மென்மையானது! ஆனால் தோல்வியை சந்தித்தவன் இதயம், இரும்பை விட வலிமையானது...!

-விவேகானந்தர்-



# பட்ஜெட்டை குழப்பினால் நாடாளுமன்றம் கலைப்பு

## அரசு அவதானம்

**கொழும்பு, ஒக். 30**

**சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடிக்கும் வகையில் பொதுஜன பெரமுன கட்சி செயற்பாட்டால் நாடாளுமன்றைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்வதற்கு அரச உயர்மட்டம் அவதானம் செலுத்தியுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இதன்போது இரண்டாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பின்போது பாதீட்டை ஆதரித்துவிட்டு, குழுநிலை விவாதத்தின்போது சில அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்க மொட்டுக் கட்சி திட்டமிட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறான நடவடிக்கையில் மொட்டுக் கட்சி இறங்கினால், பாதீடு நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது. (ச-44)

# தேர்தல் திருத்தச் சட்டவரைவுகள் அடுத்த வாரம் நாடாளுமன்றில்!

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு, நாடாளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு, மாகாணசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டவரைவு ஆகிய மூன்று தேர்தல் திருத்தச் சட்ட வரைவுகளும் எதிர்வரும் நாடாளுமன்ற வாரத்தில் விவாதிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இந்த விவாதங்கள் நடைபெறவுள்ளன. இது தொடர்பான நிகழ்ச்சி நிரல் கடந்த 19ஆம் திகதி கூடிய நாடாளுமன்ற விவகாரக் குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு, எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் நாடாளுமன்ற வாரத்தின் இறுதி நாளான 10ஆம் திகதி பரிசீலிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்ட வரைவு மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதேவேளை- எதிர்வரும் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவின் இரண்டாம் வாசிப்பு அல்லது வரவு-செலவுத் திட்ட உரையை நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நடத்துவதற்கு நாடாளுமன்ற விவகாரக்குழு தீர்மானித்துள்ளது.

அதன் இரண்டாம் வாசிப்புக்கான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஒரு வாரத்துக்கு நடைபெறவுள்ளதுடன், நவம்பர் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் அல்லது குழுவின் விவாதம் நவம்பர் 22ஆம் திகதி முதல் டிசெம்பர் 13ஆம் திகதிவரை 19 நாள்களுக்கு நடைபெறவுள்ளது. (எ-இ)

நாளை 31.10.2023 செவ்வாய்க்கிழமை ஐப்பசி 14
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் சிறந்த விஞ்ஞானிகளாக யாழ். பல்கலைப் பேராசிரியர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 30

**உலகின் சிறந்த விஞ்ஞானிகளின் தரவரிசையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் இருவர் இடம்பெற்று சாதனை படைத்துள்ளனர்.**

அமெரிக்காவின் டான்போர்ட் பல்கலைக்கழகம், பணிநாள் மற்றும் வருடாந்த அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பல்வேறு காரணிகளைக்கொண்டு தர வரிசைப் படுத்தி பட்டியல் வெளியிட்டு வருகின்றது.

அதன்படி வெளியிட்ட இந்தத் தர வரிசைப் பட்டியலில் உலகின் சிறந்த விஞ்ஞானிகள் வரிசையில் யாழ்ப்பாண விஞ்ஞான பீடத்தை சேர்ந்த கலாநிதி ரி.மதனராஜன், பொறியியல் பீடத்தை சேர்ந்த பேராசிரியர் ந.சதிபரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அத்துடன் மொழியியலாளர் வரிசையில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆங்கிலமொழி கற்பித்தல் மையத் தலைவரும், அமெரிக்காவிலுள்ள பென்சில்வானியா அரச பல்கலைக்கழகத்தின் பிரயோக மொழியியல், ஆங்கிலம் மற்றும் ஆசிய கற்கைகளுக்கான பேராசிரியருமான சுரேஷ் கனகராஜா தெரிவாகியுள்ளார்.

அவரது பெயர் தற்போது புகழ் பூத்த மொழியியலாளர் நோம் சொம்ஸ்கியின் பெயருக்கு அடுத்தபடியாக காணப்படுகிறது.

அதேவேளை அவர் மீண்டும் உலகத்தின் முதல் பத்து மொழியியல் பேராசிரியர் வரிசையில் ஒருவராகவும் இடம்பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)




## தேசிய புத்தாக்கப் போட்டி வேம்படி மாணவி சாதனை

யாழ்ப்பாணம், ஒக். 30

புத்தாக்குநர் ஆணைக்குழுவால் வருடாவருடம் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் தேசிய புத்தாக்கப் போட்டியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பதக்கம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ரூபிகா அருந்தவம். இந்தப் போட்டியின் 2022 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது குறித்த மாணவி கௌரவிக்கப்பட்டார்.

இவர் 2021ஆம் , 2022ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட இதேபோட்டியிலும் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கத்தைத் தனதாக்கியவராவார்.

அதேவேளை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானபீடத்தினால் வருடாந்தம் தேசிய ரீதியில் நடத்தப்படும் புத்தாக்கப் போட்டியிலும் கடந்த இரண்டு வருடங்களாகப் பங்குபற்றி பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)



## பருவமழை இடர் பாதுகாப்பு கிளி.யில் கலந்துரையாடல்!

கிளிநொச்சி, ஒக்.30

வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையை எதிர்கொள்வது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையால் உண்டாகும் இடர்களை எதிர்கொள்ளும் முறைகள் மற்றும் அவற்றை குறைப்பதற்கான திட்டமிடல்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட துறையினருடன் விவாதிக்கப்பட்டது.

சீரற்ற காலநிலையால் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

மேலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள், வீதிப்போக்குவரத்து, வீதி விபத்து, பாடசாலை மற்றும் மருத்துவமனைகளில் அனர்த்த குறைப்பு செயற்றிட்டம் முன்னெடுப்பு ஆகியவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (ச-113)



## சர்வதேசத்தின் சீற்றத்துக்கு இலக்காகிறது அரசாங்கம்!

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் இராஜதந்திர முன்னெடுப்புகள் பலவீனமாகவே காணப்படுகின்றன. இதனால் இலங்கை மீது கடும் சீற்றத்தில் சர்வதேச நாடுகள் உள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

வெளிநாட்டுப் பயணங்களின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச பிரதிநிதிகளுக்கு வெவ்வேறான கருத்துகள் கூறிவருகிறார். சீனக் கப்பல் தொடர்பில்கூட தற்போதைய அரசு பல்வேறு கதைகளைக் கூறிவந்தது. அந்தக் கப்பலை வரவிடமாட்டோம் என இந்தியாவிடம் கூறிவிட்டு மறுபக்கம் சீனாவின் கப்பலுக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது. - இவ்வாறு நொடிக்கு நொடி மாறுபட்ட கருத்துகளை அரசாங்கம் தெரிவித்துவருவதால் முக்கியமான பல சர்வதேச நாடுகள் இலங்கைமீது சீற்றத்தில் உள்ளன. அரசின் இந்தச் செயற்பாடு காரணமாக இலங்கை மக்கள் மீதும், இலங்கைமீதும் கோபம் கொள்ளவேண்டாம் என சர்வதேசத்திடம் கோருகின்றேன் - என்றார். (ச-44)

## வைரவிழாக் கொண்டாட்டம்



கிளிநொச்சி, ஒக் .30

**தருமபுரம் இலக்கம் 1 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 65 ஆம் ஆண்டில் கால்பதிக்கும் வைரவிழாவை சிறப்பிக்கும் வகையில் கடந்த சனிக்கிழமை நடைபவனி ஊர்வலம் இடம்பெற்றது.**

பாரம்பரிய கலாசார உடைகளில் கலை நயங்களை சித்திரிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடைபவனி தருமபுரம் மருத்துவமனை முன்பாக ஆரம்பமாகி பாடசாலை மண்டபத்தை வந்தடைந்தது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், அயற் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## வட்டு. இந்துக் கல்லூரி விஜயதசமி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 30


யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் விஜயதசமி நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் லங்கா பிரதீபன் தலைமையில் சிறப்புற்றன.

இதன்போது பூஜை வழிபாடுகள், ஏடு தொடக்கல், மாணவர்கள் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து நவராத்திரி விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட அராலி மத்தி மலரும் முன்பள்ளியின் சிறுவர் தினத்தை முன்னிட்டு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் முன்பள்ளி மாணவர்களுக்கான புத்தக பைகள் வழங்கிவைக்கப்பட்டன. (ஒ-125)



## ஊடகர் மாணிக்கவாசகம் நினைவாக 'மாணிக்கம் விருது'

வவுனியா, ஒக். 30

சிரேஷ்ட ஊடகவியலாளராகப் பணியாற்றி மறைந்த பொன்னையா மாணிக்கவாசகம் நினைவாக 'மாணிக்கம் விருது' அறிமுகம் செய்யப்பட்டு சிரேஷ்ட ஊடகவியலாளர் தினசேன ரத்துகமகேவுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா, குருமன்காடு பகுதியிலுள்ள விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா ஊடக அமையத்தின் ஆலோசகராகவும், அதன் உருவாக்கத்துக்கு காரணமாக இருந்தவருமான மறைந்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம், தமிழ் மக்களது பிரச்சினைகளைப் போர்க்காலத்திலும், போருக்குப் பின்னரும் சிங்கள, ஆங்கில மொழி ஊடகங்கள் ஊடாக உலகறியச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-18)

சமுர்த்தி தேசிய சம்மேளனத்தின்

## 'மக்கள் பாராட்டு' போட்டி யாழ். மாவட்டம் சாதனை

யாழ்ப்பாணம், ஒக். 30

சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்துடன் இணைந்ததாக நடத்தப்பட்ட சமுர்த்தி தேசிய சம்மேளனம் 2023 - 'மக்கள் பாராட்டு' (பிரஜா ஹரசர) போட்டியின் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் புகைத்தல் மற்றும் போதைக்கு எதிரான சமுர்த்தி கொடி தின நிதி சேகரிப்பின் மக்கள் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், சிறந்த சமுர்த்தி சமுதாய அமைப்பின் மக்கள் தலைவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

சமுர்த்தி கொடி தின நிதி சேகரிப்பில் தேசிய மட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டம் முதலிடத்தைப் பெற்றது. அதற்கான விருதை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் சார்பில் மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

மேலும் 'இளைஞர்களுக்கான அழகான ஒரு செய்தி' எனும் மகுடத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற கரவெட்டி பிரதேச அமைப்பின் அணியின் தலைவர் மற்றும் சிறந்த தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் பாராட்டப்பட்டனர். (ச-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். நண்பர்களின் சந்திப்பும், அவர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயமும் உண்டாகும். முயற்சியைத் தொடங்குவது நல்லது. முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். குழப்பம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** எதிலும் பொறுமையைக் கடைப்பிக்கவேண்டிய நாள். கடன் வாங்குவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலனில் அக்கறை காட்டவும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடிய வரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் உண்டாகும்.

## நல்லூர்- கதிர்காமம் யாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 30

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தனின் ஐப்பசி மாத கார்த்திகை விரதத்தை முன்னிட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து புனித திருத்தல தரிசன யாத்திரை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் வேண்டி இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் பங்கேற்று யாத்திரையை ஆரம்பித்து வைத்தார். தரிசன யாத்திரையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட அடியவர்கள் பங்கேற்றனர். (ச-66)



## திருமந்திர விளக்கவுரை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நல்லூரிலுள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் திருமந்திர விளக்கவுரை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை நடத்தப்படவுள்ளது. (ச-66)

## நெடுந்தீவுப் படகுகளுக்கே குறிகாட்டுவானில் முன்னுரிமை

யாழ்ப்பாணம், ஒக். 30

நீண்ட ஆழ்கடல் பயணத்தை மேற்கொள்ளும் நெடுந்தீவுப் பயணிகள் படகுகளுக்கே குறிகாட்டுவான் இறங்குதுறையில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், நேர அட்டவணைப்படி சீராக இறங்குதுறையில் படகுகள் தரித்து மக்களுக்கு அசௌகரியமற்ற சேவை வழங்குவதை ஒழுங்குபடுத்தி உறுதிப்படுத்துவதற்காக இரண்டு கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியாகதீபம் திலீபன் நினைவுநாளையொட்டி கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட 20 மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.
கிளிநொச்சி மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் லண்டனிலுள்ள புலம்பெயர் உறவுகளின் நிதியனுசரணையில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ச-214)



போக்கட்டி அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் தினவிழா கடந்த 6ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திக்குழு நிர்வாக உறுப்பினர் திருமதி ம.திருமகள் தலைமையில் இடம்பெற்றது. (ம-159)





தனங்களப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது. தனங்கிளப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் தலைவர் விமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் குறித்த பிரதேசத்தில் உள்ள முதியோருக்கு அன்பளிப்புபொருள்ளும் வழங்கப்பட்டன. (ம- 100)



தேசிய சமாதானப் பேரவையின் நிதி அனுசரணையுடன் 'சொன்ட்' நிறுவனத்தால் சிறுவர்தின நிகழ்வு கோயிற்குடியிருப்பு கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ம-159)



அனலைதீவு அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய வருடாந்தத் திருவிழாத் திருப்பலி அண்மையில் இடம்பெற்றது. (ய-9)





உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நயினாதீவு அஞ்சலகத்தினரால் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்தில் அண்மையில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ச-66)



யாழ்ப்பாணம் அச்சுவேலி மருத்துவமனைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இ.லோகேஸ்வரன் என்பவரால் மேற்படி பொருள்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. (ம)





ஹாட்லிக் கல்லூரியின் 185ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களது ஏற்பாட்டில் இருநாள் நிகழ்வுகள் கடந்த 07, 08 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்போது முதல் நாள் நிகழ்வில் 185 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 185 மரங்கள் நாட்டும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. அதன் தொடக்கமாக கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மரங்கள் நாட்டப்பட்டன. ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் த.கலைச்செல்வன், ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருமான சிறிசற்குணராஜா உள்ளிட்டோர் மரங்களை நாட்டி வைத்தனர். (ய-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிக்கு குறுக்கே தென்னைகள் அச்சத்தின் மத்தியில் பயணம்!

## சங்குவேலி மக்கள் விசனம்



யாழ்ப்பாணம், ஒக். 30
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்குவேலி பிரதான வீதியின் குறுக்காக தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்து காணப்படுவதால் அச்சத்தில் மத்தியில் பயணம் செய்ய நேரிடுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;
இந்த வீதிலுள்ள தனியார் வீடொன்றில் தென்னைமரங்கள் ஓங்கி வளர்ந்து வீதியின் குறுக்காக வளைந்து காணப்படுகின்றன.

இதனால் அந்தத் தென்னை மரங்களிலிருந்து தேங்காய்கள் எவ்வேளையிலும் விழலாம் என்ற அச்சத்திலேயே வீதியால் பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் அவற்றிலொரு தென்னைமரம் சரிந்துவிழும் நிலையில் ஆபத்தாகக் காணப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனமெடுத்து குறித்த மரங்களை வெட்டி அகற்றி அச்சமற்ற போக்குவரத்துக்கு வழிவகுக்கவேண்டும் - என்றனர். (ச-125)


### வேலையாள் தேவை

தோட்ட வேலை செய்வதற்கு ஆள் தேவை. 45 - 50 வயதிற்கு உட்பட்டவர். தங்கி நின்றுவேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

077 400 2920


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 • 03 • 1945

மறைவு 09 • 11 • 2022



கடந்த 09.11.2022 சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### கதிரவேலு தியாகராஜா

ஓர் ஆண்டு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காது
உங்கள் நினைவு
நினைவு வருகையில் - நிலை
இழந்து போகிறோம் - அப்பா!
எங்கள் இதய நதியின் ஓடமாய்
உங்கள் நினைவுகள் என்றும்
ஓடிக் கொண்டே இருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

(ss3263) (N.I.)

V.H. லேன், இருபாலை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


## வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

தீபாவளி தினம் வரை

# இந்தியன் செலக்ஷன்

## தீபாவளி ஜவுளிக் கொண்டாட்டம்



பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புரொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## விஷேட விலைக்கழிவு

டொப் 500/=

ரெடிமேட் சல்வார் 750 /=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


## மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 03 - 1954

மறைவு 28 - 10 - 2023



### திருமேனகாதேவி உமாபதிசிவம்

(உரிமையாளர் – 11, சிறி ரெக்ஸ் – நவீனசந்தை, சாவகச்சேரி )

வேலாயுதம் வீதி,நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமேனகாதேவி உமாபதிசிவம் 28.10.2023 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் உமாபதிசிவம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி ஐயர் - கமலம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், திருமலர்ராணி, திருமுருகராஜா, திருமங்களநாயகி, திருமோகனராதா, திருமதிவதனா, திருமதிரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கேதீஸ்வரன மற்றும் நாகராசா, தர்மராஜா, நடேசலிங்கம், சௌந்தரராஜா, கணேஸ்வரி, சரஸ்வதி, ராஜேஸ்வரி, லலிதா, இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் மேற்கு காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி .

உமாபதிசிவம் - 077 290 0201
தர்மராஜா - 077 728 8731

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி தெற்கு கலைவாணி முன்பள்ளிச் சிறுவர்களின் சிறுவர்தின நிகழ்வும் முதியோர் தின நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை கலைவாணி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றன. (ச-36)






பளை இந்திராபுரம் முன்பள்ளியினரின் சிறுவர்தின விழா அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள் மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டனர். (ய-9)



பளை தர்மக்கேணி அ.த.க.பாடசாலையின் வைரவிழா அதிபர் வே. செல்வகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-9)





யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வாணி விழா நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார். நவராத்திரி பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவு, மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களின் கவியரங்கம் என்பன இடம்பெற்றன. (ச-66)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா கடந்த திங்கட்கிழமை பாடசாலையின் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதில் நவராத்திரியை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (ச-66)



ஊர்காவற்றுறைப் பிரதேசசபையில் ஆசிரியர் தினம் மற்றும் சிறுவர்தின நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் போதைச் சாரத்தியத்துக்காக கைது!

கொழும்பு, ஒக். 30

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவிசெனவிரத்ன மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. அரச சொத்துக்கள் எதற்கும் சேதம் ஏற்படவில்லை. அத்துடன் ரவி செனவிரத்ன தன்னை முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் என அடையாளப்படுத்தவுமில்லை. இது பிணையில் விடக்கூடிய சிறு குற்றம். எனினும் மேல்மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விபத்து இடம்பெற்ற இடத்தில் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிக்கு 'ரவி செனவிரத்னவை கைது செய்து உள்ளே தள்ளுமாறு' உத்தரவிட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-6)

## முதியோர் தின நிகழ்வும்: சாதனையாளர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 30

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூகநிலைய புலம்பெயர் மண்ணின் மைந்தர்களின் அனுசரணையில் முதியோர்தின நிகழ்வும் சாதனையாளர் கௌரவிப்பும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காந்திஜி சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் தே.ரமணதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்கவுள்ளார். (ச)

# அரச சேவையாளர்கள் இன்று போராட்டம்?

கொழும்பு, ஒக்.30

அனைத்து அரச சேவையாளர்களும் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு மற்றும் ஒவ்வூதிய முரண்பாடுகளுக்கு உடனடியாகத் தீர்வு கோரி நாடு முழுவதும் வேலை நிறுத்தம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதுமுள்ள அனைத்து அரச சேவையாளர்களும் இன்று வீதிக்கு இறங்குவதற்குத் தயார் நிலையில் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. அதேவேளை, எதிர்காலத்தில் 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கோரி தனியார் மற்றும் அரச துறைசார் பணியாளர்களும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ள னர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

### ஆய்வுப்...

சீனக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கும், இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும் இந்தியா கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில், நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் அண்மையில் சீனக் கப்பலின் வருகைக்கு அனுமதி வழங்கப்பட்டு கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது. இந்த நிலையிலேயே மேற்படி கப்பல் இன்றும் நாளையும் இலங்கையில் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் சீனக் கடற்படை தன் பலத்தை பலமடங்கு உயர்த்தியுள்ளது. அதற்கு இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகளும் ஒரு காரணம். பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு சீனாவின் இந்த ஆய்வுப்பணிகள் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த விவகாரம் ஆசியப் பிராந்தியத்தில் தற்போது தீவிரமாகக் கண்காணிக்கப்படும் விடயமாக மாறியிருக்கின்றது. (அ-ம)

### மயங்கி...

அனோஜினி (வயது-10) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

சென். ஜேம்ஸ்மகளிர் கல்லூரியில் கல்விகற்கும் இந்த மாணவி கடந்த 21ஆம் திகதி தலைவிறைப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்று அதிகாலை 2 மணியளவில் உயிரிழந்தார். மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### வயிற்றுவலி...

கிளிநொச்சி - தருமபுரத்தைச் சேர்ந்த சிந்துஜன் பானுஜா (வயது - 20) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் கடந்த 25 ஆம் திகதி வயிற்று வலி காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### பண்ணைக்...

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று மதியம் பயணித்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளானது. ஓட்டோவில் பயணித்த மூன்று பெண்கள், ஒரு குழந்தை உட்பட ஐவரே காயமடைந்தனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-26-125)

### மின்சாரம்...

தனது வீட்டில் வைத்து, சுண்டல் வண்டிக்குரிய மின்குமிழைப் பொருத்தும் போதே அவர் மின்தாக்குதலுக்கு உட்பட்டார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார்.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26-125)

### பேராசிரியராக...

யராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர்.விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (அ-ம-125-66)

### அரிசியின்...

வேண்டி ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக சந்தையில் அரிசியின் விலை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. நெல் விலை உயர்வால் அரிசியின் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்து வருகின்றனர். விலைக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும்போது அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டால் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் விற்பனை செய்கின்றனர். இதை நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ளமுடியாது. எதிர்காலத்தில் மாவட்டம் தோறும் சென்று நிச்சயமாகச் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வோம். தொடர்ந்தும் விலையைக் கட்டுப்படுத்த முடியாது போனால் அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் - என்றார். (அ-ம)

### முதியவர்...

தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (வயது - 68) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

இராணுவத்தின் முகாமில் இருந்து அகற்றப்படும் இரும்புகளை இருவரும் இணைந்து விற்பனை செய்துவந்துள்ள நிலையில், இது தொடர்பான கொடுக்கல் வாங்கல் பிரச்சினையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. தாக்குதலின்போது சிப்பாய் கஞ்சா போதைப்பொருளை பாவித்திருந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரான 31 வயதுடைய சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-19-213)

### 17 இலங்கையர்கள்...

இஸ்ரேல் - காஸா மீதான தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் முழுமையான போர் குறித்த அச்சங்களுக்கு மத்தியில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 17 இலங்கையர்கள் தொடர்ந்து காஸா பள்ளத்தாக்கில் சிக்குண்டுள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் தற்போது தென்காஸாவில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால் எகிப்துக்குச் செல்லும் ரபா எல்லை தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளதால் அவர்களை வெளியேற்ற முடியாத நிலையில் இலங்கை அதிகாரிகள் உள்ளனர். எகிப்துக்குச் செல்வதற்கு இதுவே ஒரேவழி. மேலும் இஸ்ரேலிய படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத ஒரே வழியாகவும் இதுவே காணப்படுகின்றது.

'மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 17 இலங்கையர்களும் தற்போது பாதுகாப்பாக உள்ளனர். எனினும் மோசமான நிலையில் வாழ்கின்றனர். அந்தக் குடும்பங்களுடன் ரமல்லாவில் உள்ள தூதரகம் நாளாந்த தொடர்புகளை பேணுகின்றது' என பலஸ்தீனத்துக்கான இலங்கைத் தூதர் நவலகே பெனெட் குரே தெரிவித்துள்ளார்.

இலங்கையர்களில் சிலர் அகதிமுகாமில் தஞ்சமடைந்துள்ளனர். ஒரு குடும்பம் கிறிஸ்தவ தேவாலயமொன்றில் தஞ்சமடைந்துள்ளது. அவர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். அருகில் குண்டுவீச்சுக்கள் இடம்பெறுகின்றன. உணவு, மருந்து, குடிதண்ணீர் போன்றவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் தூதர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழா

குமரநகர் சனசமூக நிலையமும் கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் வாணி விழாவும் முத்தமிழ் விழாவும் கைதடி குமரநகர் சனசமூக நிலைய நகுலன் கலையரங்கில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. குமரநகர் சனசமூக நிலையத் தலைவர் அ.செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன், கௌரவ விருந்தினராக நிறைமதி முன்பள்ளி முன்னாள் ஆசிரியர் திருமதி சந்திரிகா விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-159)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 11 . 1954



மறைவு 27 . 10 . 2023

**சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்**
(பரம்பரைக் குரு இணுவில் கந்தசுவாமி கோயில்)

இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் கடந்த 27.10.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (30.10.2023) திங்கட்கிழமை மக்களின் அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (31.10.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தசுவாமி கோவிலடி,
இணுவில் மேற்கு.**


**தகவல்:
குடும்பத்தினர்.**

(Cs 26760)M-1

04 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 . 09 . 1962



மறைவு 01 . 10 . 2023

**அமரர் சின்னத்துரை சிறிஸ்கந்தராசா**

**திதி: துதியை (30.10.2023)**

ஒரு குடும்ப பாசவிளக்காய்
ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்து
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
உமது நினைவுகள் எம்முடனே வாழும்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**


**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.**

**உங்கள் பிரிவால் துயருறும்
அக்காமார்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 01 - 1948



மறைவு 28 - 10 - 2023

**கனகசபை சிவஞானசுந்தரம்**

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் இருபாலை வீதி, பழனியாண்டவர் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிவஞானசுந்தரம் நேற்று முன்தினம் (28.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரி - இலட்சுமி தம்பதிகளின் மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும் Dr. உமைபாலன் (கிளிநொச்சி பொது வைத்தியசாலை), சத்தியநாராயணன் (Engineer - Singapore), ஸ்ரீதேவி (Technical officer - FAHS University of Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், Dr. வித்தியா, சோஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷிதனின் அன்புப் பேரனும், தவமணி, பரமேஸ்வரி காலஞ்சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**இருபாலை வீதி, (பழனிகோவிலடி)
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.**

**தகவல்:
குடும்பத்தினர்
021 205 3880**

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 • 11 • 1948



மறைவு 27 • 10 • 2023

**றப்பியால் அரியதாஸ் (புத்தா)**
AMT - Motel (Colombo) உரிமையாளர்

யாழ். குடத்தனை, பொற்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றப்பியால் அரியதாஸ் அவர்கள் 27.10.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றப்பியால் நேசம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரி றெஜினா (அன்னக்கிளி) அவர்களின் அன்புக் கணவரும், செல்வதாஸ் (நியூசிலாந்து), புஸ்பதாஸ், அருள்தாஸ் (சுவிஸ்), இதயதாஸ் (லண்டன்), ஸ்ரெலா (நியூசிலாந்து), அனுஸ்ரெலா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், டயானா, சங்கீதா, கஸ்தூரி, கெசியர், றொஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும், றிஸ்மிகா, கர்ஷா, அஷாப், அபியா, இக்ஷனா, லயாஸ்,அதர்னா, கல்ஸ்ரன், கென்றிக் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பொடி மாட்டீன், லட்சுமி, தருமதாஸ், குணத்தி,சுகதாஸ் மற்றும் சோபா, ஞானதாஸ், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தேவரட்ணம் (தேவகிளி), டேவிட், றெஜினாஇராஜேஸ்வரி (குஞ்சம்மா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆவரர்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.10.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு குடத்தனை, பொற்பதி, புனித இராயப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொற்பதி,
குடத்தனை.**

**அ.செல்வதாஸ்
077 639 6186**

**தகவல்:
குடும்பத்தினர்**

(cr.26759) (N.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.